**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE**
**CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : STC. Case No.376/2023**
**Sessions :**
**Deposition of Witness for : PW1 , LW1**

| | |
|---|---|
| Name | : திரு.சுகுமார் |
| Father's/Husband Name | : திரு. கோவிந்தராஜ் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 18th day February, 2026**

( எதிரி தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்)

**<u>முதல் விசாரணை</u>:-**

1. நான் தற்போது வண்டலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக வேலை செய்து வருகிறேன்.

2. கடந்த 2021ம் ஆண்டு செய்யூர் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்தேன். 2021 ம் ஆண்டு நடைபெற்ற நான் உள்ளாட்சி தேர்தல் நேரத்தில் நான் பறக்கும் படையில் மண்டல அலுவலரா இருந்தேன். இந்த நிலையில் கடந்த 05.10.2021 அன்று மாலை சுமார் 6.00 மணியளவில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து அணைக்கட்டு காவல் நிலையத்தில் உள்ளாட்சி மன்ற பஞ்சாயத்து தேர்தலில் தலைவர் பதவிக்கு போட்டியிடும் சந்திரசேகர் என்பவர் பொதுமக்களுக்கு பரிசு பொருட்கள் விநியோகிக்க முயற்சி செய்து வருவந்ததாகவும், அந்த பரிசு

பொருட்களை அணைக்கட்டு காவல் நிலையத்தில் பிடித்து வைத்திருப்பதாக எங்களுக்கு தகவல் வந்தது. அந்த தகவல் அடிப்படையில் சுமார் 6.30 மணியளவில் நான் அணைக்கட்டு காவல் நிலையத்திற்கு சென்று இது தொடர்பாக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகாரை நான் கொடுத்தேன். **(அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கு சம்பந்தமாக போலிஸ் 05.10.2021 அன்று சுமார் 6.30 மணியளவில் அணைக்கட்டு காவல் நிலையத்தில் வைத்து உதவி ஆய்வாளர் விசாரித்தார். நான் காவல் நிலையம் சென்றபோது இந்த வழக்கின் எதிரி காவல் நிலையத்தில் இருந்தார் என்றால் சரிதான். போலிசார் பரிசு பொருட்கள் பிடித்து வைத்திருப்பதை காண்பித்து என்னிடம் புகார் கொடுக்க சொன்னதால் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். புள்ளி விவரக் கணக்கிற்காக போலிசார் என்னை பயன்படுத்தி பொய் புகார் பெற்று எதிரிக்கு எதிராக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும் நான் அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது

மறு விசாரணை... இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-Tmt.N.Valliamma
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur (FAC)